முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1524

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**01.12.2023**, வெள்ளிக்கிழமை

1. மாதவ ராஜனே அரங்கா
மண்ணுலகை மீட்க வந்த தேசிகா
மேதகு வானவர்கள் எல்லாம் மெச்ச
மேன்மைபட தர்மத்தை புரிகின்ற குருராஜா
2. அரசனே உந்தனுக்கு சுப்பிரமணியர் யானும்
அருளுவேன் ஞானஅறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 15 ம் நாள், 01.12.2023, வெள்ளிக்கிழமை)
வரமாக உன்னுள் யானிருந்து
வையகத்தை காத்து வருதல்காண
3. காணவே ஓங்காரக் குடில்
கலியுகத்தின் சிறந்த ஞானசபையாகும்
ஞானம் கருதி அலையும் மக்கள் எல்லாம்
நம்பிக்கை வைத்து அரங்கன் குடிலுக்கு வந்தால்
4. வந்த கணமே ஞானசித்தியும்
வருங்காலத்தில் ஞானவழி விட்டு அகலாமல்
அகலாது தர்மஞான வழியோடு இணைந்து
வருமுலகில் பிறவி அறுக்கின்ற
5. அறுக்கின்ற மகா சக்தியே வரமாக அரங்கன் வழி அடையநேரும்
நேர்மை கொண்டு உலகோர் ஞானம் பயின்று
நிலவுலகில் அரங்கனிடம் மகாமந்திர தீட்சை வரமாக பெற்று இயங்கினால்
வையகத்தில் வடிவேலன்என் அருள்காட்சி பெறுவதோடு
6. பெறுவதோடு இந்த பேருலகில்
பிறவிப்பிணி அறுத்து இனிதே பிசகின்றி ஞானவான்களாய்
வருங்காலங்களில் அரங்கன் தேடுகின்ற உருவாக்குகின்ற ஞானிகளாக
வையகத்தில் வரம்பெற்று இன்னும் சிறந்து

7. வழுத்திடுவேன் வருகின்ற மக்கள் எல்லாம்
அரங்கனால் உலக மாற்றம் செய்து
ஆற்றல்பட ஞானியருள் ஞானியராய்
மாற்றம் கண்டு சிறப்பர்

8. அற்புதத்தை அரங்கனுள் இருந்து ஆறுமுகன்யான் நடத்த
அரங்கன் வேறில்லை ஆறுமுகன்யான் வேறில்லை
ஆற்றல்பட இதையுணர பிரணவக்குடில் நோக்கி வருதல் வேண்டும்
மகாசூட்சுமத்தை அடைந்து உலகோரும் ஞானியாக வேண்டும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–